## கரைச்சிப் பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 23 மார்ச் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 மே 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 25 ஒக்டோபர் 2019 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கரைச்சிப் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய நிதிக்கூற்றானது 23 மார்ச் 2019 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டதுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகள் / சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய செயலாற்றல் அறிக்கைகள் நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பித்தல் என்ற விடயம் எதிர்வரும் வருடத்தில் தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்தல் வேண்டும். | சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கணக்கீட்டுக் கொள்கைகள் தவறுதலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**(இ)கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவுக் கட்டண நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 226,300 பெறவேண்டிய வருமானமாக வெளிப்படுத்தப்படாமையினால் வருமதியாளர் கணக்கு மீதியும் வருமானமும் மீளாய்வாண்டில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | நிலுவை வருமானங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபையினால் இதுவரை காலமும் திண்மக்கழிவகற்றல் தொடர்பான பதிவுகள் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தமையினால் நிதிக்கூற்றில் பெறவேண்டிய வருமானமாக வெளிப்படுத்தப்படவில்லை. இனிவரும் காலங்களில் அட்டுறு அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) | சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ள 11 வேலைத்திட்டங்களின் ரூபா 10,153,179 கொடுப்பனவுகள் 31 மார்ச் 2019 வரை வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் சொத்துக்களும் பொறுப்புக்களும் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | வேலைத்திட்டங்களை குறித்த ஆண்டிலேயே குறிப்பிட்ட காலப்பகுதியில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சில வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவு கிடைக்கப்பெறாததனால் இறுதிக்கொடுப்பனவுகள் வழங்க முடியவில்லை. சில வேலைத்திட்டங்களுக்கு மே மாதத்தில் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 9 காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 659,623 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | விரைவாக பிடிபணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி ஒழுங்கு விதி 139 | செலவினத்தை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் கையொப்பமின்றி ரூபா 1,279,098 பெறுமதியான 15 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்துக் கொடுப்பனவுகளும் முன் அனுமதி பெறப்பட்டே மேற்கொள்ளப்பட்டது. எனினும் தவறுதலாக அதிகாரமளிக்கும் உத்தியோகத்தரிடம் கையொப்பம் பெறப்படவில்லை. தற்போது கையொப்பம் இடப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது |
| (M) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 | பதவியிலிருந்து விலகிய , நீக்கப்பட்ட மற்றும் ஒய்வு பெற்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 330,304 கடன் தவணைப்பணம் 1 தொடக்கம் 8 வருடங்களாக அறவிடுவதற்கு ஆக்கபூர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 330,304 கடன் தவணைப்பணத்தில் ரூபா 134,419 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மாகாண நிதி ஒழுங்கு விதி இல 163(3) | நான்கு முற்பணங்கள் ரூபா 3,714,176 உரியவாறு உரிய காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிவநகர் உருத்திரபுரம் வீதி திருத்த முற்பணம் ரூபா 2,500,000 22 ஜனவரி 2019 சீர்செய்யப்பட்டுள்ளது. ஏனைய 3 முற்பணங்களுக்குரிய நிதி கிடைக்கப்பெறாமையினால் சீர் செய்யப்படவில்லை. |

**1.4.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உதயநகர் 30 வீட்டுத்திட்ட வீதி திருத்த கொடுப்பனவின் போது பெறுமதி சேர் வரிச்சட்டத்தின்படி ஒப்பந்ததாரர் வரிப்பதிவில் செயலிழந்த ஒப்பந்ததாரராக இருந்தும் ரூபா 411,568 பெறுமதி | பெறுமதிசேர் வரிச்சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

சேர்க்கப்பட்ட வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,734,689 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 85,704,856 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 28 பெப்ரவரி 2018 ஆம் திகதிய உறுதிச்சீட்டு இலக்கம் 109 மூலம் ரூபா 367,260 தளபாடக் கொள்வனவுக்கென வழங்கப்பட்ட முற்பணம் மற்றும் 21 மார்ச் 2018 ஆம் திகதிய உறுதிச்சீட்டு இலக்கம் 151 மூலம் ரூபா 76,995 தளபாடக் கொள்வனவுக்கென வழங்கப்பட்ட முற்பணம் முறையே 10, 11 மாத கால தாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மாகாண நிதி விதி 163.3(ii) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தளபாட முற்பணங்களுக்கான நிதி உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறாததனால் சபை நிதியிலிருந்து திசெம்பர் மாதத்தில் சீர் செய்யப்பட்டது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| வருமான மூலம் | | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டிய லிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,000,000 | - | - | - | 200,000 | - | - | - |
| (ii) | வாடகைகள் | 31,960,000 | - | 38,669,757 | 5,932,692 | 32,180,000 | - | 39,038,907 | 5,731,702 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,362,000 | - | 7,230,545 | - | 5,406,000 | - | 6,646,677 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 28,482,600 | - | 58,770,789 | 42,193,973 | 24,032,870 | - | 63,050,128 | 33,445,040 |
| | | **66,804,600** | | **104,671,091** | **48,126,665** | **61,818,870** | | **108,735,712** | **39,176,742** |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மீள்கேள்வி குத்தகையளிப்புக்கள் அனைத்தும் கேள்விச் சபை தீர்மானம் நிறைவேற்றப்படாமல் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் வழங்கப்படும் நடைமுறையே பின்பற்றப்பட்டுள்ளதுடன் மீள்கேள்விக்கான அறிவித்தலும் எந்தவிதமான கேள்வித்தீர்மானமும் இல்லாமலேயே மேற்கொள்ளப்படுகின்றது | பெறுகை நடைமுறைக்கமைய செயற்பட வேண்டும். | கேள்விச்சபை தீர்மானங்கள் எதிர்வரும் காலத்தில் எழுத்து மூலம் பேணப்படும். தவறுதலாக குத்தகை ஒப்பந்தங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதுள்ளன. |
| (ஆ) | கிளிநொச்சி மாட்டிறைச்சிக் கடைக்காக 1,2 ஆம் கேள்வியின் போது எழுத்துமூலம் விலைக்கேள்வி சமர்ப்பித்திருந்த நபர் ஒருவரின் அவ் கேள்வித் தொகைகளுக்கு குத்தகை வழங்காது மூன்றாவது பகிரங்க ஏலத்தின் போது குறித்த நபரிற்கு ரூபா | பெறுகை நடைமுறைக்கமைய செயற்பட வேண்டும். | குறித்த நபர் வைப்புப்பணத்தை செலுத்தாமையால் குத்தகை வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 2,145,000 க்கு குத்தகை வழங்கப்பட்டதனூடாக சபைக்கு ரூபா 555,500 நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | மோட்டார் கிரேடர் மற்றும் உருளையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,070,625 கடந்த 1 தொடக்கம் 2 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பகுதியாக அறவீடுகள் அறவிடப்பட்டுள்ளது. மிகுதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் திண்மக்கழிவுக் கட்டணம் 22 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 226,300 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பகுதியாக அறவீடுகள் அறவிடப்பட்டுள்ளது. மிகுதிஅறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (உ) | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 5,932,692 வாடகைகள், குத்தகைகள் 1 தொடக்கம் 7 அண்டுகளாக அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவைகளில் அறவிடக்கூடியன அறவிடப்பட்டு வருகின்றன. மிகுதி சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. |
| (ஊ) | சபையானது தனது வருமானத்தினை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை கடந்த 10 ஆண்டுகளாக எடுத்திருக்கவில்லை. | வருமானத்தினைப் பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானங்களின் அறவீடு வர்த்தகமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு அறவிடப்படுகின்றது. |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1989 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் வீதவரி வருமானமாக ரூபா 1,000,000 மதிப்பிடப்பட்டது. ஆயினும் மதிப்பீட்டிற்கு அமைய வீதவரி | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்க மைய அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

மற்றும் வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பில் இரண்டு மாதங்களுக்கு தொடர்ச்சியாக வாடகை செலுத்த தவறும் இடத்து வியாபார நிலையம் சபையினால் பொறுப்பேற்கப்படும் என, குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்கு அமைய செயற்படாமையினால் 78 வியாபார நிலையத்தில் ரூபா 1,739,264 வாடகைக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இனிவரும் காலங்களில் வியாபார நிலையங்கள் சபையால் பொறுப்பேற்கப்படும் |

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழற்சட்டம் 23 (அ) மற்றும் 1533/16 இலக்க 2008 ஜனவரி 25 திகதியிடப்பட்ட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கமைய சுற்றாடல் உரிமம் பெறப்படாமலும் புதுப்பிக்கப்படாமலும் 06 அரைக்கும் ஆலைகளுக்குரிய உரிமைக்கட்டணம் ரூபா 42,000 பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் | இவ்வருடம் இவற்றை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,811,527 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 10,154,071 தொகையான முத்திரைக் | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தில் ரூபா 27,113,894 தை மற்றும் பங்குனி 2019 இல் கிடைக்கப்பெற்றது. முத்திரைத்தீர்வை ரூபா 8,049,591 மே 2019 இல் கிடைக்கப்பெற்றது. |

கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுசேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுககாதார, வசதி மற்றும் நலன்புரி ஆகியன சபையினால் நிறைவேற்றப்படவேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | செயல்நடவடிக்கை திட்டம் தயாரிப்பது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. பயிற்சியின் பிற்பாடு தயாரிக்க ஏதுவானதாக காணப்படும். |

#### (ஆ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உதயநகர் 30 வீட்டுத்திட்ட வீதி திருத்த வேலையானது உரிய காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டிருககாமையால் ஒப்பந்த உடன்படிக்கையில் அட்டவணை 6.4 இற்கமைய காலதாமத தண்ட அறவீடு ரூபா 193,751 அறவிடப்பட்டிருக்கவில்லை. | காலதாமதக்கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உதயநகர் 30 வீட்டுத்திட்ட வீதி திருத்த வேலைத்திட்டம் சம்மந்தமான காலதாமதக் கட்டணம் அறவிடாமைக்கான தெளிவான காரணங்கள் இனங்காணப்பட்டு தாங்கள் பணிக்கும் சந்தர்ப்பத்தில் பிடிபணத்தில் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட | சுற்றறிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் | எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 2018 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 119 ஆகவும் உள்ளவாறான ஆளணியினர் எண்ணிக்கை 97 ஆகவும் இருந்ததுடன் 25 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காததுடன் 03 பதவியினர்கள் அனுமதி பெறாது மேலதிகமாக பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 ஆளணி இடமாற்றம் காரணமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். 04 ஆளணி நிரப்பப்பட்டுள்ளது. 05 ஆளணி பிரத்தியேக ஆளணியாக உள்ளது. மிகுதி ஆளணி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அறிவியல் நகர் எரிகொட்டகை அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் வேலை மேற்கொள்ளப்படாது கணியச்சிட்டை 22 திசெம்பர் 2017 தயாரிக்கப்பட்டு ரூபா 495,138 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் வேலை 2019 ஜனவரி மாதமே மேற்கொள்ளப்பட்டிருந்தது | | பதிலளிக்கப்படவில்லை |
| (ii) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலையினை கணிய அளவீடு மேற்கொண்ட போது நிறைவேற்றப்பட்ட வேலை குறைவினால் ரூபா 162,681 மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணிய அளவிடுகளுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2018 இல் நிலையான சொத்துக்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 243,685,587 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆயினும் சபையினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிலையான சொத்துப்பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ள இவ் வருடத்தில் இருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தீயணைப்பு வாகனத்திற்கு வரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பத்திரம் என்வற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் வரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பத்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீயணைப்பு வாகனம் அரச அதிபரால் பிரதேச சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட வாகனம் இதனுடைய காப்புறுதிப் மற்றும் வரிப்பத்திரங்களை பெற்றுத்தர முடியாது உள்ளமையினால் 2020 ஆம் ஆண்டுக்குரிய பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 11 வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. இவற்றை பயன்படுத்தக்கூடியவாறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலதிக வாகனங்கள் காணப்படுவதால் எதிர்வரும் வருடங்களில் கரைச்சி நகர சபை, கரைச்சிப் பிரதேச சபை மற்றும் கண்டாவளை பிரதேச சபை எனப் பிரிக்கப்படும் பொழுது இவ் வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பிரித்து வழங்க தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. |

### 3.4.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டுக்கென சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த வாகனங்கள் நாளது வரை சபைக்கு உடமையாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சில வாகனங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்கள் உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகை

### 3.5.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வட்டக்கச்சி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2018 ஆம் ஆண்டு ரூபா 700,000 பெறுமதியில் தண்ணீர்தாங்கி அமைக்கப்பட்டது. ஆயினும் தாங்கியில் தண்ணீரை ஏற்ற முடியாதுள்ளமையால் பயன்பாடின்றி காணப்படுகின்றது. | விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | தண்ணீர் ஏற்றுவதற்கு இரண்டு தடவைகள் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் நீர் பொதுமக்களின் பாவனைக்கு சுகாதார முறையில் உகந்ததல்ல என்பதால் கமநல சேவை நிலையத்திலிருந்து நீர் நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ii) | அம்பாள்குளம் பிரதேசத்தில் உள்ள காணிக்கு ரூபா 1,760,000 பெறுமதிக்கு 2017 ஆம் ஆண்டில் மதில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் காணியானது பயன்பாடின்றி பற்றைகளால் நிறைந்து காணப்படுகின்றது. | பயன்பாடற்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | காணியின் பாதுகாப்பு கருதி மதில் அமைக்கப்பட்டது. |

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் உப அலுவலக திருத்த வேலையில் மாபிள் பதிக்கப்பட்டமை தொடர்பாக ரூபா 493,328 செலவு செய்யப்பட்டது இவ் வேலையின் நிறைவேற்றலினால் ரூபா 52,172 மேலதிக கொடுப்பனவு ஏற்பட்டுள்ளது. | மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் அலுவலகத்திற்குள் தண்ணீர் புகுந்து நிலத்தில் ஏற்பட்ட நீர் கசிவு காரணமாக சீமெந்தின் பிடிப்புத் தன்மை குறைவடைந்தமையினால் ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | | | சில மாபிள்கள் கிளம்பி இருந்தன. அதன் பின்னர் இடையூறாக இருந்தமையால் எஞ்சிய மாபிள்களும் அகற்றப்பட்டன. |
| (ii) | வட்டக்கச்சி ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் அமைத்தல் வேலைத்திட்டத்தில் உண்மையான அளவிடையானது கணிப்பீட்டுத்தாள் அளவிடையுடன் வேறுபட்டிருந்ததனால் ரூபா 718,395 மேலதிக கொடுப்பனவாக ஒப்பந்ததாரருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிக கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |